வில்லெடுத்து நாணேற்றியோர் குறியெல்லாம் இலக்கின்மீதே இருக்கவேண்டும்! தி.மு.க. கூட்டணிக்காக

# ஏப். 23 வரை நம்மை “எரியும் மெழுகுவத்திகளாக”க் கரைத்துக் கொண்டு கடமையாற்றிடுவோம்; கள வெற்றியை அறுவடை செய்ய ஆயத்தமாவோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மார்ச் 18 - அனைவரும் அரும்பணியை, வில்லெடுத்து நாணேற்றியோர் குறியெல்லாம் இலக்கின்மீதே தவிர, வேறு எப்பக்கமும் இல்லை என்பதை நினைத்து, பருவம் பாராமல், ஏப்ரல் 23 வரை நம்மை எரியும் மெழுகுவத்திகளாக கரைத்துக் கொண்டு, கடமையாற்றிடுவோம்! கள வெற்றியை அறுவடை செய்ய ஆயத்தமாவோம்! தந்தை பெரியார் கூறிய ‘கட்டுப்பாடே’ மிக முக்கியம், மறவாதீர்! வெறும் வார்த்தைக் கோவையல்ல - வினை முடிக்கும் திட்பம் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்தியத் தேர்தல் ஆணையம் கடந்த 15.3.2026 அன்று மாலை 4 மணிக்கு, அய்ந்து மாநிலங்களின் சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதிகளை அறிவித்து, அந்தந்த மாநிலத் தேர்தல் அதிகாரிகள் மேற்பார்வையைத் தம் அதிகாரத்தின்கீழ் கொண்டு வந்துவிட்ட நிலையில், தேர்தல் ஆணையம் நடுநிலை தவறாமல், நியாயத் தராசின் முள், ஒரு பக்கமாகச் சாயாமல், விருப்பு - வெறுப்பின்றி, போட்டியிடும் அனைத்துக் கட்சிகள், வேட்பாளர்கள் ஆகியோரிடம் எந்தவிதப் பாரபட்சமும் காட்டாமல் கடமையாற்றிட வேண்டியது தலையாய கடமையாகும்!

“சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக நடந்துகொள்ளவேண்டும்” என்பது ஒரு நெடுங்காலத்து, ஆங்கிலச் சொற்றொடர் கருத்தாகும்.

இதற்குமுன் எப்போதும் நடந்திராத ஓர் அதிர்ச்சிக்குரிய நடவடிக்கை!

ஏற்கெனவே தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது, இந்திய ஜனநாயகத் தேர்தல் நடைமுறைகளில் - இதற்குமுன் எப்போதும் முன் நடந்திராத ஓர் அதிர்ச்சிக்குரிய நடவடிக்கையாகும்!

அந்த எண்ணங்களை மக்கள் மனதிலிருந்து அகற்றி, தங்கள் மீதான அவப்பெயரை நீக்குவதற்கு இந்த அய்ந்து மாநில சட்டப்பேரவைக்கான தேர்தல்கள், ஒரு நல் வாய்ப்பாகும்.

**இப்போதைய மில்லியன் டாலர் கேள்வி!**

இதைச் சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ளப் போகிறதா? அல்லது ‘எங்களது கடமையாற்றல் ஒரு பால் சாய்ந்தே இருக்கும்! நீங்கள் என்ன சொல்வது, நாங்கள் என்ன செய்வது? எங்களுக்குத் தெரியாதா?’ என்ற அதிகாரத் தோரணையில், ‘ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு’ என்ற படியான போக்கை நீடிக்கப் போகிறதா? என்பது இப்போதைய மில்லியன் டாலர் கேள்வி!

புதுச்சேரிக்கும் - தமிழ்நாட்டிற்கும் சட்டமன்றத் தேர்தல் பெரும்பாலும் ஒரே தேதியில், ஒரு தடவையில் நடப்பது வழமை!

‘செவி கோளாக் காதில் ஊதிய சங்காக’ ஆகிவிடக் கூடாது!

இப்போது திடீரென்று புதுச்சேரி தேர்தல் நாள் என்று ஏப்ரல் 9 ஆம் தேதியை அறிவித்திருப்பதற்கு என்ன காரணம்? என்று புரியவில்லை. அதனால், அம்மாநில காங்கிரஸ் எம்.பி., திரு.வைத்தியலிங்கம்கூட அதனைச் சுட்டிக்காட்டி, வேறு ஒரு நாளில், முன்பைப்போல, தமிழ்நாட்டிற்குத் தேர்தல் நடக்கவிருக்கும் ஏப்ரல் 23 ஆம் தேதியே புதுச்சேரிக்கும் தேர்தல் நடத்தவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன் வைத்துள்ளார். இது வெறும் ‘செவி கோளாதார் காதில் ஊதிய சங்காக’ ஆகிவிடக் கூடாது!

**மக்கள் சக்தி என்ற மகத்தான சக்தி!**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டணிக் கட்சிகளில், ஆளும் தி.மு.க.வின் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, தங்களது கொள்கை பலத்தினாலும், சாதனைகளைத் தொடர்ந்து செய்ததனாலும், மக்கள் சக்தி என்ற மகத்தான சக்தி என்றும் எங்கள் பக்கம் என்று உறுதியோடு தங்களது தேர்தல் வியூகத்தினையும், வினைத் திட்பத்தினையும் அமைத்துக் கொண்டுள்ளனர்.

‘அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி’ என்று பெயரளவில் சொல்லப்படும் கூட்டணியில், பல முக்கிய முடிவுகளை - அதிகாரப்பூர்வமாக ஆணையிடும் வகையில், தேசிய ஜனநாயகக் (NDA) கூட்டணிதான் எல்லா பணிகளையும் செய்து வருகிறது. புதிதாக சேர்க்கும் பணி, கூட்டணிக்கு அழைக்கும் பணி, இணைக்கும் பணி எல்லாம் அவர்களே செய்கிறார்கள் என்றாலும், பலங்குறைந்த நிலையில் இருப்பது அந்தக் கூட்டணியின் பரிதாப நிலைதான்!

உண்மையான போட்டி என்பது இவ்விரு கூட்ட ணிகளுக்கு இடையில்தான். தி.மு.க. கூட்டணி மீண்டும் வெற்றி பெறாது தடுக்க வேண்டுமானால், அதற்கு தற்போது அமைந்துள்ள என்.டி.ஏ. கூட்டணிக் கட்சிகளின் பலம் போதுமானதாக இல்லாததால், புதிதாக அரும்பியுள்ள - அரசியல் கட்சி என்ற பெயர் மாற்றம் அடைந்துள்ள ஒரு நடிகரின் ரசிகர் மன்றத்தையும் இணைக்கச் சில வித்தைகளை, தங்களின் அதிகாரத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் முயற்சிகள், இது வரை நிறைவேறிய தாகச் செய்திகள் வரவில்லை.

என்.டி.ஏ. கூட்டணி என்கிற அ.தி.மு.க. கூட்டணியினருக்கு இருந்த எதிர்பார்ப்பும், சந்திக்கும் ஏமாற்றங்களும் நாளும் நம்பிக்கை இன்மையையே அவர்களுக்குப் ‘பரிசாக’ அளிக்கும் நிலை கள யதார்த்தமாகும்! காக்கா - நரி - வடை கதை போல உள்ளது எதிர்க்கட்சி கூட்டணி நிலை!

**தி.மு.க. தலைவரின் கனிந்த அறிவுரை!**

தி.மு.க. கூட்டணியில் மிகக் கடுமையாக உழைத்து, இரண்டாம் முறை தனது தலைமையில் ஆட்சி மிகவும் உறுதி என்ற மனதிட்பத்துடனும், மனத் திண்மையுடனும், அரசியல் விவேகத்துடனும் (Political Sagacity) நடந்துவரும் போது - தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், எம்.பி.,க்கள் கூட்டத்தில் கூறியுள்ளார். ஒரு தலைமை, எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், எப்படியெல்லாம் நடந்து கடமையாற்ற வேண்டுமோ, அப்படி ஒளிவு மறைவின்றி தனது அனுபவத்தில் கனிந்த அறிவுரையை இடித்துக் கூறியுள்ளார் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்.

“நாம் நடத்திய அத்தனைக் கூட்டங்களையும் மாநாடாக மாற்றிய பெருமை உங்களையே சேரும். குழப்பம் விளைவிப்போரின் சதியை முறியடித்துப் பலமான கூட்டணியை அமைத்திருக்கின்றோம். நலத்திட்டங்களால் நாமே வெல்வோம் என்ற எண்ணத்தை எதிரிகளிடமும் ஏற்படுத்தியுள்ளோம்.

தேர்தலுக்கு இன்னும் 39 நாள்கள் மட்டுமே உள்ளன. 200 தொகுதிகளில் நாம் வென்றாக வேண்டும். 234 தொகுதிகளிலும் ஸ்டாலின்தான் வேட்பாளர் என நினைத்துப் பணியாற்றுங்கள்! தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் நடப்பது தலைவருக்குத் தெரியவா போகிறது என நினைக்கவேண்டாம். அத்தனைத் தொகுதிகளையும் கண்காணிக்கிறேன்; எனக்குத் தகவல் வந்துவிடும். அதிக வெற்றி பெற்றுத் தருவோருக்கே அமைச்சர் பதவி; சீனியாரிட்டி இரண்டாம் பட்சம்தான்” என்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

‘பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்’ என்ற வள்ளுவர் கூற்றை அடிநாதமாக நினைவிற் கொண்டு, தந்தை பெரியார் கூறியபடி “‘கட்டுப்பாடு’ என்பதற்குச் சரியான பார்வையும், மிளிரும் பொருளும் ஒரே அர்த்தம்தான். மற்ற மற்ற சொற்களான ‘கடமை’, ‘கண்ணியம்’ போன்றவற்றிற்குக்கூட பல பொருள் சொல்லப்படும்” என்பதை மனதில் கொள்வீர்!

அதை நமது தி.மு.க. மற்றும் கூட்டணிச் செயல்வீரர்கள் கருத்திலேந்தி, கள மாட ஆயத்தமாக வேண்டும்.

மக்கள் நம் பக்கம் - மற்றவர் எப்பக்கத்தில் இருந்தாலும், எத்தனை ‘சொத்தைகள்’ சேர்ந்து ‘வித்தைகள்’ புரிந்தாலும், அய்ந்தாண்டு தி.மு.க. ஆட்சியின் சாதனைகளையே சரித்திரப் படிக்கட்டுகளாக்கிக் கொண்டு, சென்னை கோட்டையை நோக்கி, வேக நடைபோட்டு, விவேகத்தின் வெற்றிக் கனி பறிக்க ஆயத்தமாகிவிட்டார் உழைப்பின் உருவமாகவும், உரிமை முழக்கமாகவும், பண்பாட்டின் எடுத்துக்காட்டாகவும், கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கே, தம் கட்சியைவிட - முன்னுரிமை தர வலியுறுத்தும் ஒப்பற்ற ஆற்றல், அன்பின் சின்னமுமான நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஏப்ரல் 23 வரை நம்மை எரியும் மெழுகுவத்திகளாகக் கரைத்துக் கொண்டு கடமையாற்றிடுவோம்!

இந்த அனைவரும் அரும்பணியை, ‘வில்லெடுத்து, நாணேற்றியோர் குறியெல்லாம் இலக்கின் மீதே தவிர, வேறு எப்பக்கமும் இல்லை’ என்பதை நினைத்து, பருவம் பாராமல், ஏப்ரல் 23 வரை நம்மை எரியும் மெழுகுவத்திகளாக கரைத்துக் கொண்டு கடமை யாற்றிடுவோம்!

கள வெற்றியை அறுவடை செய்ய ஆயத்தமாவோம்!

‘திராவிடம் வெல்லும் - அதை

வரலாறு என்றும் சொல்லும்!’

இது வெறும் வார்த்தைக் கோவையல்ல - வினை முடிக்கும் திட்பம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று (17.3.2026) மதுரவாயல் வடக்குப் பகுதி அ.தி.மு.க. 146வது வட்ட துணைச் செயலாளர் சி.மதன்ராஜ் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக்கொண்டனர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் துரை.வீரமணி மற்றும் எம்.ரூபன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# ‘ஞான பாரதம்’ திட்டத்தில் தமிழ்நாடும் தமிழ்மொழியும் தொடர்ந்து புறக்கணிப்பு!

## ஒன்றிய அரசின் ஒடுக்குமுறைச் செயலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!



புதுடெல்லி, மார்ச். 18- இந்தியாவின் பழங்கால கையெழுத்துப் பிரதிகளான ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச்சுவடிகளைப் பாதுகாக்கவும், அவற்றை டிஜிட்டல்மயப்படுத்தவும் ஒன்றிய அரசு கொண்டு வந்த ‘ஞான பாரதம்’ திட்டம் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய கலாச்சார அமைச்சகத்திடம் கேள்வி ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு கிடைத்துள்ள பதில்கள் மற்றும் அதைத் தொடர்ந்த ஆய்வுகளில் இருந்து, இந்த திட்டத்தில் தமிழ்நாடும், தமிழ்மொழியும் புறக்கணிக்கப்படுவது அம்பலமாகியுள்ளது. நமது வாக்குகளுக்காக திருக்குறள் ஒப்பித்து நாடகமாடும் தரப்பினர், பின்வாசலில் செய்யும் நடவடிக்கைகள் எல்லாமே தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் இழைக்கும் துரோகமாகவே இருக்கிறது.

**1. ‘ஞான பாரதம்’ இணையதளத்தில் தமிழ்ச்சுவடிகள் எங்கே?**

இந்த திட்டத்தை ஆரம்பிக்கும் போது, இந்தியா முழுவதும் ஒரு கோடிக்கும் அதிகமான சுவடிகளைப் பாதுகாக்கப் போவதாகவும், அவற்றை டிஜிட்டல்மயப்படுத்தப் போவதாகவும் ஒன்றிய அரசு அறிவித்தது. மேலும், அறியவரப்படாத சுவடிகளை கண்டெடுக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தது.

ஆனால், ‘ஞான பாரதம்’ திட்டத்தின் அதிகாரப்பூர்வ WWW.GYANBHARATAM.COM இணையதளத்தில் இதுவரை பதிவேற்றப்பட்டுள்ள 1 லட்சத்திற்கும் அதிகமான சுவடிகளில், தமிழ்ச்சுவடிகள் இருப்பதற்கான எந்த தடயமும் இல்லை. ‘தமிழ்’ என்ற குறிச்சொல்லுக்கு இந்த இணையதளத்தில் கிடைப்பதெல்லாம் சமஸ்கிருதச் சுவடிகளே.

ஏற்கனவே, பல்லாயிரம் கோடிகளில் சமஸ்கிருதத்திற்கு சாமரம் வீசிக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசு, இந்த திட்டத்திலும் அதையே திணித்துள்ளது. ஆகவே, இது ‘ஞான பாரதம்’ அல்ல, வெறும் ‘ஞான சமஸ்கிருதம்’.

**2. நாடு முழுக்க 45 மையங்கள் ஆனால், தமிழ்நாட்டில் ஒன்று கூட இல்லை:**

இந்த திட்டத்திற்காக நாடு முழுக்க 28 ஒருங்கிணைந்த மையங்கள் (Cluster Centres) மற்றும் 17 தனித்த மையங்கள் (Independent Centres) என, மொத்தம் 45 மையங்களை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இதில், பார் போற்றும் பண்பாடும், உலகின் மூத்த மொழி எனப் புகழப்படும் அன்னைத் தமிழும் கொண்ட தமிழ்நாட்டிற்கு, ஒரு மையம் கூட ஒதுக்கப்படவில்லை.

இரத்தம் கொதிக்கிறது. பீகாரில் 4 மையங்கள், உத்தரப்பிரதேசத்தில் 3 மையங்கள், குஜராத்தில் 3 மையங்கள் என ஒன்றிய அரசின் செல்ல மாநிலங்களில் பல மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், பல்லாயிரமாண்டு காலமாக சுவடித்தொகுப்புகளில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டிற்கு ‘0’ மையங்கள்.

ஒன்றிய அரசு எத்தனை சதித்திட்டங்கள், அதிகார வரம்புமீறல்களைச் செய்தாலும், தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் முதன்மைக் காவலராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழைப் பத்திரமாக காத்து, எதிர்கால தலைமுறையினருக்கு கையளிப்பார். இதற்கு, அவரது ஆட்சியில் தமிழ் வளர்ச்சித்துறையும், பண்பாட்டுத்துறையும் செய்து வரும் சாதனைகளே சாட்சி!

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### சட்டமன்றத் தேர்தல்: சென்னை மாவட்டத்தில்

# ரூ.10 இலட்சத்திற்கும் மேல் பணப்பரிவர்த்தனை செய்பவர்களின் பெயர் விவரங்களை தெரிவிக்கவும்!

## வங்கி அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்!

சென்னை, மார்ச்.18- இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வங்கி பணப் பரிவர்த்தனைகளை கண்காணிப்பது குறித்தும், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை செயல்படுத்துவது குறித்தும் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வங்கி அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் வங்கி சேமிப்பு கணக்கில் இருந்து வழக்கத்திற்கு மாறாகவோ அல்லது சந்தேகப்படும்படி ரூ.10 இலட்சத்திற்கும் மேல் பணப்பரிவர்த்தனை செய்பவர்களின் பெயர் விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் வருமான வரித்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

பெருந்தொகைக்கான பணத்தை சந்தேகத்திற்குரிய வகையில் திரும்பப் பெறுதல் ஏதேனும் கவனத்திற்கு வந்தால், அதுகுறித்துத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், ரூ.10 லட்சத்திற்கும் அதிகமான பெருந்தொகை குறித்த தகவல்கள், வருமான வரிச் சட்டங்களின் கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக, மாவட்ட தேர்தல் அலுவலரால் வருமான வரித் துறையின் ஒருங்கிணைப்பு அலுவலர் (DGIT (Inv.) அலுவலகத்தில் உள்ள மாவட்டப் பொறுப்பில் உள்ள துணை ஆணையருக்குத் தகவல் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முகவர்கள், நிறுவனங்கள் ஆகியவை வங்கிகளில் இருந்து பணம் எடுத்து செல்லும் போது அதற்குரிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும். ஏ.டி.எம். இயந்திரங்களில் பணம் வைக்க வாகனங்களில் செல்லும்போதோ அல்லது ஒரு கிளையில் இருந்து வேறொரு கிளைக்கு பணம் வாகனங்களில் எடுத்து செல்லும்போதோ வாகனத்தில் இருப்பவர்கள் அடையாள அட்டை மற்றும் உரிய ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும்.

பல நபர்களுக்கு R.T.G.S. சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு சேமிப்பு கணக்கில் இருந்து பண பரிமாற்றம் நடைபெற்றால், அதுதொடர்பான விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். வழக்கத்திற்கு மாறாகவும், சந்தேகத்திற்கிடமான வகையிலும் ஏதேனும் வங்கிக் கணக்கிலிருந்தோ அல்லது வேட்பாளர் வங்கி கணக்கிலிருந்தோ அல்லது அவரை சார்ந்தவர்களது வங்கி கணக்கிலிருந்தோ அல்லது அரசியல் கட்சி வங்கிக் கணக்கிலிருந்தோ ரூ.1 இலட்சத்திற்கும் மேல் பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டால் அதை உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

மாவட்டத்தின் முன்னோடி வங்கி அலுவலர் நாள்தோறும் அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளின் தினசரி பணப்பரிவர்த்தனை விவரங்களை பெற்று தேர்தல் செலவு கண்காணிப்பு குழுவிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.நா.பூஷ்ணாதேவி, சென்னை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், வங்கி மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாதவரம் தெற்கு பகுதி 29வது வட்டம் பொன்னியம்மன்மேடு பகுதியைச் சார்ந்த மாற்று கட்சியினர் 200க்கும் மேற்பட்ட இளைஞரணி சகோதரர்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.கே.வினோத் ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

# மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் அறிவிப்பு!

சென்னை, மார்ச்.18- கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கு இணங்கவும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (18/03/2026) புதன் கிழமை மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத் தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 2026 ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் குறித்து.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவித்தள்ளார்.



ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் திமுக சார்பில் கவரைப்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய செயலாளர் கி.வேணு ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன் உள்பட நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.